
இஷ்ட இலிங்காய நம







புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்,
உரும்பிராய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி சிவபாக்கியம் மகாலிங்கம்

அவர்களின் சிவ ஐக்கியப் பேறு குறித்த

# நினைவு மலர்

02.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இஷ்டஇலிங்காய நம



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்,
உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட
வீரசைவ குல திலகர்

அமரர்

# திருமதி.சிவபாக்கியம் மகாலிங்கம்

(ஆதி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

02.04.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எமது அன்பான தெய்வத்தின்*

*பாதக்கமலத்திற்கு*

*இந்நூல்*

# சமர்ப்பணம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
பண்போடும், பாசத்தோடும் பேணிப் பாதுகாத்
எம்மை நல்வழி நடாத்தி
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் காணிக்கையாக
இந் நினைவு மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

*இங்ஙனம்*

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
20 ✦ 08 ✦ 1953

உதிர்வு
19 ✦ 03 ✦ 2017

அமரர்

# திருமதி சிவபாக்கியம் மகாலிங்கம்

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி பங்குனி ஆறாம் நாள்
பூண்ட அபரபக்க ஸப்தமியில் பொற்புறு நற்
சூரியவாரம் கேட்டையிலே குணவதி சீர் சிவபாக்கியம்
மருவினார் மன்றாடிப் பாதம் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்

## பஞ்ச புராணம்



உட்டுறுக்கவும் பகுதி

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி.சிவபாக்கியம் மகாலிங்கம் அவர்களின் வாழ்க்கைச் சீர்

யாழ்ப்பாணத்தின் தென்பால் காணப்படும் சப்த தீவுகளில் ஒன்று புங்குடுதீவு. இங்கு பல மூத்த குடிகளின் வாழ்வுத் தடங்களைக் காணலாம். இங்கே இணுவில் தெற்கைச் சேர்ந்த தில்லையம்பலம் நல்லதம்பிக்கும், புங்குடுதீவு கிழக்கு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் விசாலாட்சிக்கும் கடைக்குட்டிச் செல்ல மகளாக அவதரித்தவர் ஆதி என செல்லமாக அழைக்கப்படும் திருமதி. சிவபாக்கியம் மகாலிங்கம் அவர்கள். இவருக்கு மூத்தவர்களாக மூன்று அண்ணன்மாரும் இரு அக்காமாரும் உளர்.

குடும்ப விளக்காய் உதித்த அறுவரையும் கலைமயில் அறிவுடன் விளங்க வேண்டுமென்ற அவாவில் பெற்றோரும் பேரனார் பொன்னரும் விரும்பினர். அவ்வகையில் அமரர் சிவபாக்கியம் ஆதி ஆரம்பக்கல்வியை ஸ்ரீ இராச இராஜேஸ்வரி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின் சகோதரிகள் மணமுடித்துச் சென்றமையாலும் நீண்டகாலமாக "ஆஸ்மா" நோயினால் பீடிக்கப்பட்டிருந்த தாயாரின் உடல் நலத்தைக் கவனத்திற் கொண்டமையாலும் கல்வியைத் தொடராது விட்டுத் தாயாருக்கு உதவியாக வீட்டிலிருந்தார்.

இந்நிலையில் 26.08.1978ஆம் ஆண்டு தாயாரின் பிரிவு இவரைப் பெரிதும் வாட்டியது. இருந்தும் தந்தையாரினதும் மண மாகாத அண்ணாமாரினதும் அரவணைப்புடனும் பாதுகாப்புடனும் அருகில் வசித்த மூத்த சகோதரர் சகோதரியினது உதவியுடனும் புங்குடுதீவில் வசித்து வந்தார். 1979ஆம் ஆண்டின் இறுதியில் இளைய சகோதரன் வெளிநாடு செல்ல விரும்பி சிங்கப்பூர் செல்லும் போது தங்கை ஆதியை மூத்த சகோதரி மருதாவின் பொறுப்பில் இணுவிலில் கூட்டி வந்து ஒப்படைத்தார். அத்துடன் சகோதரி மனோன் குடும்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவிலில் வந்து வசிக்கத் தொடங்கியமையும் ஒரு காரணமாக அமைந்தது.

இவ்வாறு இணுவிலில் திருமணம் நடைபெறும் காலம் வரை வசித்து வரும்கால் உரும்பிராய் மூன்று கோயிலடியைச் சேர்ந்த முருகேசு அவர்களுக்கும் சுழிபுரம் இராசமணி அவர்களினதும் அருமைமகன் மகாலிங்கத்தை 21.10.1984இல் இனிதே மணம் புரிந்தார். மணவாழ்வின் பயனாக இவருக்கு நான்கு மைத்துனியர் கிடைக்கப் பெற்றனர். அமரர் திருமதி. சிவபாக்கியம் மகாலிங்கம் தம்பதியரின் இல்லற வாழ்வின் விழுதுகளாக 11.12.1985இல் நிரோதயனும், 17.12.1986இல் நிசாந்தனும், 30.05.1988இல் வைதேகியுமாக இரு மைந்தரும் ஒரு மகவுமாக வாய்க்கப் பெற்றனர். தம் பிள்ளைகள் நல்லறிவுடன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்து மகிழ்வுற்றார். மகன் நிரோதயன் பல்கலை சென்று பட்டதாரியாக வெளியேறியமை இவரின் மனதிற்கு பெரும் புளகாங்கிதமாக அமைந்தது எனின் மிகையாகாது.

தம் விழுதுகள் திருமண வயதையடைய செல்ல மகள் வைதேகிக்கு இணுவில் மேற்கைச் சேர்ந்த சிறீகாந்தா தம்பதியரின் மகன் கோகுலனுக்கு மணமுடித்து வைத்து இன்புற்றதுடன் மூத்தமகன் நிரோதயனுக்கு இணுவில் தெற்கைச் சேர்ந்த கிருபாகரமூர்த்தி தம்பதியரின் புதல்வி தாட்சாயணியை மணம் செய்து வைத்தும் அகமகிழ்ந்தி ருந்ததுடன் இளைய மகனின் நற்காரியத்தைப் பார்த்து மகிழ வேண்டும் என்ற நிலையில் இருந்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவரும் வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை (19.03.2017) காலை 6.20 மணியளவில் கேட்டை நட்சத்திரமும் ஸப்தமித் திதியிலும் சிவஜக்கியப்பேறு பெற்றார்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசைவம்

## வீரசைவம் பெயர்க் காரணம்

வீரம் + சைவம் = வீரசைவம். வீரசைவம் என்றால் வீரம் நிறைந்த சைவம் என்று பொருள் என இலிங்கத் தாரணசந்திரிகா என்ற நூலில் பேராசிரியர் சாக்தேஹர் குறிப்பிட்டுள்ளார்.

வீரம் இரு வகைப்படும். ஒன்று புலனொடுக்கத்தால் அகத்தில் ஏற்படும் ஆண்மை, மற்றையது வாளேந்தி அறம் நாட்டும் வீரம். வீரசைவன் கோயிலில் உள்ள இலிங்கத்தை வழிபடத் தேவையில்லை. தனது இஷ்டலிங்கத்தை வழிபட்டால் போதும். ஆனால் லிங்கத்திற்கு ஏதாவது ஊறு ஏற்படுமானால் தனது உயிரைக் கொடுத்தேனும் வன்முறையைப் பாவித்தேனும் இலிங்கத்தைக் காப்பாற்ற வேண்டும். லௌகீகத்தை வெறுத்து இஷ்டலிங்கம் என்ற ஞான வாளோடு திரிபவன் வீரசைவன். வேறுபாடுகளை நீக்கிய சைவம் வீரசைவம். ஆரியக் கருத்துக்களை மறுத்தவர்கள் வீரசைவர் என மறை மலையடிகள் கூறுகிறார்.

## இலிங்காயத் அல்லது இலிங்காயதம்

வீரசைவர்களுக்கு இலிங்காயத்துகள் என்றும் ஒரு பெயர் உண்டு. இலிங்கத்தை மார்பில் அணிந்திருப்பதனால் இவர்கள் இலிங்காயத்துகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இலிங்காயத் என்றால் லிங்கமாக ஆகுதல் அல்லது ஆக முயற்சித்தல் என்று பொருள்.

## வீரசைவத்தின் தோற்றம்

வீரசைவம் தோன்றிய காலம் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இராமாயண காலம் தொட்டு வீரசைவ வழிபாடு இடம்பெற்று வருகிறது. இலங்கைவேந்தன் இராவணன் ஒரு வீரசைவன் என கூறப்படுகிறது. இராம – இராவண யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைந்ததும் இராவணன் தம்பி விபீடணன் 300 கோடி லிங்கங்களை இலங்கையிலும் இந்தியாவிலும் பிரதிஷ்டை செய்ததாக கூறப்படுகிறது. சிந்துவெளி நாகரிகத்தில் வீரசைவ வழிபாடு இடம்பெற்றிருக்கலாம் என அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மொஹெஞ்சதாரோ ஹரப்பா நகரங்களில் சிறிய அளவிலான லிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை வைத்தே ஆய்வாளர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

வீரசைவத்தின் தோற்றம் அல்லது பரம்பல் பற்றிப் பார்க்கும் போது அகத்தியர் காலத்திலேயே வீரசைவம் தோன்றியது அல்லது பரம்பியது எனலாம். வீரசைவ ஆசாரியார்களுள் முதன்மையான வராக கருதப்படும் இரேணுகார் அல்லது இராவணாராத்திரியார் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அகத்தியருக்கு உபதேசம் செய்ததாக சித்தாந்த சிகாமணி கூறுகிறது.

வீரசைவத்தின் தோற்றம் பற்றி அறிந்துகொள்ள முடியா விட்டாலும் வீரசைவம் வீறு கொண்டெழுந்தது பன்னிரண்டாம் நூற்றாண்டில் தான். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமண, வைஷ்ணவ மதங்கள் எழுச்சி பெறத் தொடங்கின. மறுபுறத்தில் இஸ்லாமியப் படையெடுப்பு. இந்த மும்முனைத் தாக்கத்திலிருந்து சைவத்தைக் காப்பாற்ற ஒருவர் புறப்பட்டார். அவர்தான் கர்நாடக அரசில் முதல் மந்திரியாக இருந்த பசவர். வீரசைவத்தைப் பரப்பியவர்களுக்கு விஜய நகரப் பேரரசு ஆதரவளித்தது. ஒருபுறம் வாளேந்தி போர் முனையில் இஸ்லாமியரை எதிர்க்க வேண்டிய வீரம், மறுபுறம் விபூதி அணிந்து சமுதாயத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு இரண்டையும் பசவர் ஏற்றுக் கொண்டார்.

## வீரசைவம் சாதி ஒழிப்பை வலியுறுத்தியது

வருணாச்சிரமதர்மம் இந்து மதத்தைப் பிடித்து ஆட்டுகின்ற பெரு நோய். இதிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வீரசைவம் சாதி வேறுபாடுகளை வெறுத்து ஒதுக்கியது. காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களில் கடற்றொழில் செய்பவர்களின் பரம்பரையில் வந்தவர்களும் இலிங்கத் தாரணம் செய்து வீரசைவர்களாக மாறியுள்ளனர்.

## வீரசைவம் சமூக சேவையையே வலியுறுத்துகிறது

இஸ்லாம் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறது. கிறிஸ்தவம் உனது பாவங்களை நான் சுமக்கிறேன் என கூறுகிறது. வீரசைவம் சமூக சேவையை வலியுறுத்துகிறது. ஊருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் அந்தத் தீங்கிலிருந்து ஊரைக் காப்பாற்ற வீரசைவன் முதலாவது ஆளாகத் தன்னைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென வீரசைவம் வலியுறுத்துகிறது. சைவம் முக்தி அல்லது சிவனுடன் இரண்டறக் கலத்தலே (பிறவாத வரம்) இறுதிநிலை என கூறுகிறது. வீரசைவம் மக்களுக்கு சேவை செய்வதற்காக மீண்டும் மீண்டும் பிறக்க வரமருள வேண்டும் என வலியுறுத்துகிறது. இந்த இடத்தில் தான் சைவத்தில் இருந்து வீரசைவம் வேறுபடுகிறது.

## வீரசைவத்தில் பெண்ணடிமைத்தனம் இல்லை

பசவர் தனது இயக்கத்தில் பெண்களையும் இணைத்துக் கொண்டார். வீரசைவப் பெண்களும் இலிங்கத்தை மார்பில் தரித்து சிவபூசையில் ஈடுபட்டனர். ஒரு பெண் தனது மனைவியாக இருந்தாலும் அவள் தனக்கு உரியவள் அல்ல. அவள் தான் அணிந்திருக்கும் இலிங்கத்திற்கே சொந்தமானவள் என்பதை கணவன் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## வீரசைவர்களுக்கு துடக்கு இல்லை

வீரசைவர்கள் மார்பில் இலிங்கத்தை அணிந்திருப்பதனால் அவர்கள் லிங்கமாக ஆகிவிடுகின்றனர். இதனால் அவர்களுக்கு துடக்கு இல்லை என வீரசைவ நூல்கள் கூறுகின்றன. வீரசைவப் பெண்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பில் இலிங்கத்தை தரித்து தமது இஷ்டலிங்கத்திற்கு தினமும் பூசை செய்து வருவதால் அவர்களுக்கும் மாதாந்த தீட்டு இல்லையென வீரசைவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. (யாழ்ப்பாண வீரசைவர்கள் பதினொரு நாள் துடக்கு அனுஷ்டிக்கின்றனர்.)

## வீரசைவம் ஒரு மதம் சாதி அல்ல

வீரசைவம் ஒரு மதம் சாதி அல்ல. இலங்கையில் வீரசைவர் களை ஒரு சாதிப் பிரிவாக (பண்டாரம் என) அடையாளப்படுத்தி யுள்ளமை அறியாமை என்று தான் கூறவேண்டும்.

## வீரசைவம் காட்டும் வழி

வீரசைவருக்கு முப்பெரும் வழியுண்டு. அவையாவன **ஐவகையொழுக்கம், எண்வகைக் காப்பு, அறுவகை இணைப்பு.**

## ஐவகையொழுக்கம்

**இலிங்கவொழுக்கம் :** தினமும் சிவபூசை செய்தல்

**தன்னிறுத்தல் :** பெரும் பணக்காரனாயிருந்தாலும் வேலை செய்து உழைத்து உழைப்பின் ஒரு பகுதியைத் தான தருமங்களுக்கு செலவிடல் வேண்டும்.

**சிவநெறி நிற்றல்**

**தாழ்வெனுந்தகவு :** ஏனைய உயிர்களுக்கு தான் ஒரு சேவகன் எனக்கருதி சேவை செய்தல்.

**கூட்டமைப்பு ஒழுக்கம் :** பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப் பவர்களைத் தண்டிக்கத் தயங்கக்கூடாது.

## எண்வகைக் காப்பு

குரு
இலிங்கம்
சங்கமம்

[library stamp] JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீறு

உருத்திராக்கம்

மந்திரம்

குருவின் திருவடி கழுவிய நீர்

பிரசாதம்

### அறுவகை இணைப்பு

மெய்யுணர்வு

முயற்சி

அறிவு

இயற்கை உணர்வு

செயல்

ஒன்றுபடுதல்

இவற்றை ஒழுங்காக கடைப்பிடிப்பவனே வீரசைவன்.

## வீரசைவர்களின் சடங்குகள்

### லிங்கதாரணம்

***கருப்பலிங்கதாரணம் :*** குழந்தை வயிற்றிலிருக்கும் போதே தாயின் கழுத்தில் ஒரு லிங்கத்தைக் கட்டி விடுதல்; குழந்தை பிறந்ததும் அதைக் கழட்டி குழந்தையின் கழுத்தில் கட்டி விடுதல். பின்னர் குழந்தைக்கு ஏழு அல்லது ஒன்பது வயதானதும் உரிய முறைப்படி இலிங்கதாரணம் செய்தல். இந்நடைமுறை இலங்கையிலிருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு குழந்தை பிறந்து ஏழு அல்லது ஒன்பது வயதானதும் உரிய முறைப்படி இலிங்கதாரணம் செய்தல்.

இலிங்கதாரணம், தீட்சை இரண்டும் ஒரே நாளில் நடைபெறும். குருவானவர் சீடனுக்கு இலிங்கத்தின் மகிமையை எடுத்துரைத்து இலிங்கத்தை உனது உயிரிலும் மேலானதாகப் பாதுகாக்க வேண்டும் என கூறி இலிங்கதாரணம் செய்வார். உனது உயிருள்ள வரை தினமும் சிவபூசை செய்ய வேண்டும் எனவும் குரு அறிவுறுத்துவார். லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்காவது தொலைந்தால் அதனைத் தேடி எடுக்கும் வரை உணவு அருந்தக்கூடாது.

### திருமணம்

வீரசைவர்கள் தமது திருமணத்தின் போது தாலியில் சிவலிங்கத்தைத் தரித்து சிவலிங்கத் தாலி அணிவதை வழக்கமாகக் கொண்டனர்.

### வீரசைவர்கள்

ஸத்யோஜாத நெறியில் நின்று சிவபூசை செய்பவர்கள். தமது கையில் இலிங்கத்தை வைத்துப் பூசை செய்வர். தேவர்களை அழைத்து உனக்கு அது தருகிறேன் இது தருகிறேன் பதிலாக நீ எனக்கு இதை தா என்று வியாபார ரீதியில் பூசை செய்வதை வீரசைவம் வெறுக்கிறது. வீரசைவர்கள் தமது சடங்குகளின் போது பஞ்சகும்பம் வைத்து வீரசைவ ஆசாரியர்கள் ஐவரையும் ஆவாகனம் பண்ணியே தமது கிரியைகளை நிகழ்த்துவர். தீட்ஸை, லிங்கதாரணம், திருமணம், மரணச்சடங்கு போன்ற அனைத்துக்கும் இது பொருந்தும்.

### மரணச்சடங்கு

வீரசைவன் இறந்ததும் அவனது உடல் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் (தியான நிலையில்) வைத்து அதன் மேல் சமாதி கட்டப்படும். உடலை சமாதியினுள் அமர்த்தியதும் விபூதி, உப்பு, நெல் போன்றவற்றால் உடல் மூடப்படும்.

### மூன்றாம் நாள் (மூன்றாம் குழி)

மூன்றாம் நாள் ஐந்து சிவலிங்கங்களும் நந்தி, வைரவர் என்பனவும் மண்ணால் செய்து உடல் சமாதி வைக்கப்பட்ட இடத்தில் வைத்து அபிடேகம் பூசை என்பன இடம்பெறும். பின்னர் அந்த இடத்தில் சமாதி கட்டப்படும். ஆண்டுதோறும் திவசத்தின் போது இறந்தவரின் சமாதிக்கு அபிடேகம் பூசை என்பன நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்ஷ தீபம்

வீரசைவன் ஒருவன் இறந்து பதினொராம் நாள் மோட்ஷ தீபக் கிரியை இடம்பெறும். அன்றைய தினம் குருமார் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கிரியைகள் ஆரம்பமாகும். மூன்று அல்லது ஐந்து, ஏழு ஏதாவது எண்ணிக்கையில் வீரசைவக்குருமார் அமர்ந்து தமது இஷ்ட லிங்கத்திற்குப் பூசை செய்த பின் நெய் தீபம் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இறந்தவரின் ஆத்மா சோதி வடிவில் சென்று இறைவனுடன் சங்கமமாவதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. ஆலய வாசலில் கடமை செய்தவர் நிற்க குரு ஆலயத்தினுள்ளே நிற்பார். குரு சிஷ்ய உரையாடலில் இறைவனுடன் உரையாடுவது போன்ற மோட்ஷதீப பாடல்கள் பாடி முடிந்ததும் நெய் தீபம் எடுத்துச் செல்லப்பட்டு இறைவனின் பாதார விந்தங்களில் வைக்கப்படும்.

## யாழ்ப்பாணத்தில் வீரசைவம்

யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் வீர சைவர்களே பூசை செய்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தில் வேதாகம அலை ஒன்று வீசியது. இதன் பயனாக வீரசைவரின் தொண்டு மறைக்கப்பட்டது. பார்ப்பனரின் வழிபாட்டு முறை உயர்ந்தது ஏனைய வழிபாட்டு முறைகள் யாவும் குறை நிரம்பியவை என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. இவ்வாறு த.சண்முகசுந்தரம் யாழ்ப்பாண வீரசைவர் என்ற நூலில் முதலாம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது கருத்தை வலியுறுத்துவது போல் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் மத பிரசாரத்திற்கென வந்து தங்கியிருந்த Margret Leitch என்ற பெண்மணியும் தனது நாட்குறிப்பில் (Seven Years in Ceylon) pg 27 மருதடி விநாயகர் ஆலயத்தில் பூசை செய்பவரை பக்தர்கள் பண்டாரம் என அழைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

**ஆக்கம் : ந.பரமேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச தீபப் பாடல்கள்

***(சீவாத்மாவாகிய சோதி பரமாத்மாவாகிய சோதியுடன் கலக்கின்றது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நெய்த்தீபம் ஏந்தி அத்தீபத்தை ஆலயத்திற் சேர்க்கும் போது பாடப்படுவது)***

**காப்பு**

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி எத்தினாற்
பத்தி செய்கேன் என்னை நீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற அத்தாவுன்
ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

**சீடன்**

மாட்சிசேர் கைலை வாழும்
மாமறைச் சிவனே வந்து
சாட்சியாய் குருவாய் லிங்க
சங்கமன் தானே யாகும்
தாழ்ச்சியொன் றில்லா வீர
சமய மெய் முத்தி பெற்ற
மோட்ச தீபத்தின் செய்தி
முறைமையாய் உரைசெய்வோமே.

**குரு**

ஆரடா? இருளி லிங்கே
அருள்புரி பெரிய செம்பொன்
சீர்பெறு ஞான வாயில்
திகழ் கயி லாயம் வந்தே
பேர் பெறு பாச மென்னும்
பெரிய நற் கபாடமுன்பு
நீரினி வந்த செய்தி
நேர்மையா யுரைசெய் வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீடன்**

வேதன் மால் தேடிக் காணா
விண்ணவர்க் கரசே உன்றன்
பாரதமே போற்றி செய்யப்
பரிவுடனடிமை வந்தேன்
போதகப் பொருளே! யான்செய்
பிழை பொறுத் தருள்புரிந்து
பாதகமனைத்தும் தீர்த்துப்
பரகதி யருளுவாயே.

**குரு**

அருளுவா யென்று கூறும்
அப்பனே! யறையக் கேளாய்
பொருள்களோ டன்றி மற்றும்
பூஷண வகைகள் கொண்டு
இருளறை யெதிரே வந்திங்
கினையடி தன்னைப் போற்றி
அருள் பெற வந்த செய்தி
அடைவுட னுரை செய்வாயே.

**சீடன்**

துன்னுகல் லெறியும் வில்லின்
அடியொடு உதையுமன் பால்
மன்னிட ஏற்ற ஆண்ட
மாண்பினை யடிமை யெண்ணி
மன்னவர் விண்ணோர் போற்றும்
மலையக வாசல் நிற்கும்
என்னை நின்பத நிழற் கீழ்
இருத்தி யாட் கொள்ளுவாயே.

**குரு**

"ஆ" றென்று சொல்லு கின்ற
அன்பனே அகமகிழ்ந்தேன்
சூழ்கின்ற நினது மாயத்
தொடரறுத் தடிமை கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள் கொண்ட நந்தி போற்றும்
வானுயர் கபாடந் தன்னில்
தாள் வின்றி வெண்ணை வாங்கித்
தமையுடன் வீசு வாயே.

### சீடன்

வீசுவாய் வெண்ணை யென்று
விமலனா ருரைத்த போது
பாசமா யைக ளறுத்துப்
பாதமலர் அடைய வந்தேன்
நேசமா யாடிப் பாடி
நெறியுடன் வெண்ணெய் வாங்கி
ஆசிலாகட கபாடம் தன்னில்
அன்புடன் வீசினேனே.

### சிவம்

வந்து முன்னிற்கு மன்பன்
வருந்திடா வண்ண மின்னே
நந்தி நீ சென்று கண்டு
நன் மொழி பலவியம்பி
மைந்தனே! மனவராங் கேள்
வருகவென வரவழைத்துக் கொண்டு
சிந்தை யார்வத்தி னோடென்
திருப்பத மடைவிப்பாயே.

### சீடன்

எறிந்தனன் ஈசா! அன்பால்
ஏத்துவார் ஞத்தி சார்தல்
அறிந்து நற் பிரணலிங்க
பூசணையன் போடாற்றிப்
பிறிதொரு பொருளு மெண்ணாப்
பேரின்ப வாழ்வில் மூழ்கி
செறிந்து வந்தடைந் தேனுன்றன்
திருவடி நல்குவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேறு

என்று நற்புதல்வன் கூறி
இறையவன் மனமகிழ்ந்து
நன்றென நகைத்தென் பாதம்
நாமுமக் களிப்போமென்று
குன்றினிற் கணத்தை நோக்கிக்
கூட்டிவாவென்று கூற
சென்றவர் வரவழைத்துச்
சிவபத முய்ப்பித்தாரே.

### சிவன்

உய்த்தலு முமையோர் பாகன்
உகந்தடியவன் நோக்கி
எத்தனை குற்றமேனு
மெனதடி யவர்கள் செய்யின்
அத்தகு குற்ற மெல்லா
மன்பெனும் மலரே யாகும்
சித்த நீ வருந்தல் வேண்டாம்
திருப்பதம் நல்கினேனே.

### சரணம் (சீடன்)


ஆராதனை செய்யடியார் சரணம்
அருள் சேர்முக மாறுடையாய் சரணம்
பாரோர் புகழும் பரனே சரணம்
பவதக்கன் வீழ்படையாய் சரணம்
தீராதிரு நேத்திரனே சரணம்
சிவ ரங்கமாகள் தேவா சரணம்
வீராசம நூல் வீஜயா சரணம்
வீரேசுரனே சரணம்! சரணம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

அமரர் திருமதி.சிவபாக்கியம் மகாலிங்கம்
(ஆதி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*

*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

**எங்களின் அன்புத் தெய்வம்**

## அமரர்

# திருமதி.சிவபாக்கியம் மகாலிங்கம்

அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோரும், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பத்திரிகையில் அனுதாபம் தெரிவித்தோர், துண்டுப்பிரசுரங்களில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், சமூக வலைத்தளங்கள் மூலமும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோர் மற்றும் பல வழியில் உதவி புரிந்தோர்க்கும், இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இந் நினைவு மலரினைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கிய சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு.



நன்றி.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விபரம் | திருஞானசம்பந்தர் | திருநாவுக்கரசர் | சுந்தரமூர்த்தி நாயனார் | மாணிக்கவாசகர் |
|---|---|---|---|---|
| அவதரித்த நாடு | சோழவளநாடு | திருமுனைப்பாடி | திருமுனைப்பாடி | பாண்டியநாடு |
| அவதரித்த ஊர் | சீர்காழிப்பகுதி | திருவாமூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| உரிய குலம் | வைதீக பிராமணர் | வேளாளர் | ஆதிசைவர் | ஆமாத்தியப்பிராமணர் |
| தந்தையார் பெயர் | சிவபாதவிருதையார் | புகழனார் | சடையனார் | சம்புபாதசிரியர் |
| தாயார் பெயர் | பகவதி அம்மையார் | மாதினியார் | இசைஞானியார் | சிவஞானவதியார் |
| பிள்ளைப்பருவப் பெயர் | பிள்ளையார் | மருணீக்கியார் | நம்பியாரூரர் | வாதவூரர் |
| வாழ்ந்த நூற்றாண்டு | கி.பி7ம்நூற்றாண்டு | கி.பி9ம் நூற்றாண்டு | கி.பி9ம் நூற்றாண்டு | கி.பி7ம் நூற்றாண்டு |
| அக்காலத்துக்குரிய மன்னன் | பாண்டியநெடுமாறன் | 1ம்மகேந்திர பல்லவன் | நரசிங்க முனையார் | அரிமர்த்தன பாண்டியர் |
| முதல் அருள் பெற்ற தலம் | திருத்தோணிபுரம் | திருவதிகை வீரட்டானம் | திருவெண்ணை நல்லூர் | திருப்பெருந்துறை |
| முதலில் பாடிய பதிகம் | தோடுடைய செவியன் | கூற்றாயினவாறு | பித்தாபிறை | சிவபுராணம் |
| பாடிய திருமுறைகள் | 1, 2, 3 | 4, 5, 6 | 7 | 8 |
| கிடைக்கப்பெற்ற பதிக எண் | 136 + 122 + 125 | 114 + 100 + 99 | 100 | திருவா658 + திரு.கோ400 |
| மொத்தமாகஅருளிய பதிகம் | 16, 000 | 4, 900 | 3, 800 | 1058 |
| இவர் ஆளுடைய.....? | ஆளுடையபிள்ளை | ஆளுடைய அரசு | ஆளுடைய நம்பி | ஆளுடைய அடிகள் |
| ஒழுகிய நெறி | கிரியை நெறி | சரியை நெறி | யோகநெறி | ஞானநெறி |
| ஒழுகிய மார்க்கம் | சற்புத்திரமார்க்கம் | தாசமார்க்கம் | சகமார்க்கம் | சன்மார்க்கம் |
| நின்ற நிலை (பருவம்) | மனர் | அரும்பு | காய் | கனி |
| வாழ்ந்த காலம் (வருடம்) | 16 | 81 | 18 | 32 |
| இறுதியாக பாடிய திலகம் | காதலாகிக்கசிந்து | எண்ணுகேன் என்சொல்லி | தானெனை முண்படைத்தான் | திருக்கோவையர் |
| முத்தி பெற்ற தினம் | வைகாசி மூலம் | சித்திரைச் சதயம் | ஆடிச்சுவாதி | ஆனிமகம் |
| முத்தி பெற்ற தலம் | திருப்பெருமண நல்லூர் | திருப்புகலூர் | திருத்தொடித்தான் மலை | தில்லைச்சிற்றம்பலம் |
| பெற்ற முத்தி | சாமீபம் (பதமுத்தி) | சாலோகம் (பதமுத்தி) | சாரூபம் (பதமுத்தி) | சிவசாயுச்சியம் (பரமுத்தி) |
| இவருடைய இல்லாள் | 1ம்நம்பியாண்டார் நம்பியின் மகள் | - | பரவையார் ,சங்கிலியார் | - |
| இவர்களுக்கு கூறப்படும் மறுபெயர்கள் | ஞானசம்பந்தர், ஆளுடைய பிள்ளையார், சிவஞானம், பாலறாவாயர் | மருணீக்கியார், உழவாரப்படையாளி, அப்பர், வாகீசர் | நம்பியூரர்,ஆலாலசுந்தரர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன், சேரமான் தோழர், வன்றொண்டன் | தென்னவன் பிரமராயன், வாதவூரர், மாணிக்கவாசகர் |

அச்சுப்பதிப்பு: சிவஞானசம்பந்தம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில். 0773068982

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org